**இராசிபுரம் நகராட்சி தனி அலுவலர் அவர்களால் 28.05.2020–ஆம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு சாதாரணக் கூட்டத்தில் நடைபெற உள்ள கூட்ட நடவடிக்கைகள்.**

இராசிபுரம் நகராட்சி, தனி அலுவலர்,
நாள் **: 28.05.2020** இராசிபுரம் நகராட்சி

<u>பொருள்கள்</u>

(1) இராசிபுரம் நகராட்சியில் வார்டு எண். 1 முதல் 27 வரையுள்ள பொதுக் கழிப்பிடம் மற்றும் ஆழ்துளைக் கிணற்றிலுள்ள நீர் முழ்கி மின் மோட்டார்களுக்கு கீழ்க்காணும் spare மோட்டார்கள் வாங்க ஆகும் செலவினம் ரூ. 3,80,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1) | 5 HP sub motor with pump 50 x 200 m. Head Motor | : | 3 Nos. |
| 2) | 5 HP sub motor spanel board up to 750 HP | : | 3 Nos. |
| 3) | 2 HP sub motor with pump 20 LPM x 125 m. Head Motor | : | 3 Nos. |
| 4) | 2 HP sub motor spanel Board | : | 3 Nos. |

**அலுவலகக் குறிப்பு** : அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) இப்பணியினை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(1133/20/இ2)

**தீர்மானம் எண். 803**

அனுமதிக்கப்பட்டது.

(2) இராசிபுரம் நகராட்சி வார்டு எண். 6 வடக்கு காலனி பகுதியில் அங்கன்வாடி கட்டிடம் கட்டும் பணிக்கு ரூ. 9,95,000/– மதிப்பீட்டில் 2019–20–ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டப் பணிக்கு 06.05.2020–இல் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் பின்வருமாறு.

1) திருமதி ஆர். சாகிதா, ஒப்பந்ததாரர், இராசிபுரம் – மதிப்பீட்டைவிட 0.15% குறைவு.
2) திரு ஏ. மதியழகன், ஒப்பந்ததாரர், ஆர். பட்டணம் – மதிப்பீட்டைவிட 1.59% அதிகம்.

மதிப்பீட்டைவிட 0.15% குறைவான திருமதி ஆர். சாகிதா, ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மதிப்பீட்டைவிட 0.15% குறைவான திருமதி ஆர். சாகிதா, ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(2625/19/இ1)

**தீர்மானம் எண். 804**

அனுமதிக்கப்பட்டது.

(3) இராசிபுரம் நகராட்சிப் பகுதியில் கொரோனா வைரஸ் (கோவிட்–19) நோய் நகர பொது மக்களுக்கு பரவாமல் தடுக்கும் பணிக்கு கிருமிநாசினி மருந்து லைசால் வாங்கும் பணிக்கு கடந்த 21.04.2020 அன்று மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றின் விவரம் பின்வருமாறு.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | லைசால் ஒரு லிட்டர் விலை |
|---|---|---|
| 1) | சத்யா ஏஜென்சீஸ், கரூர் | ரூ. 196/– |
| 2) | தனு ஸ்ரீ ஏஜென்சீஸ், ஈரோடு | ரூ. 210/– |
| 3) | ஸ்ரீ அடிக் கெமிக்கல்ஸ், கரூர் | ரூ. 215/– |

வ.எண். 1–இல் குறிப்பிட்டுள்ள ஒப்பந்ததாரர் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ளதால், அதன் ஒப்பந்ததாரர் M/s. சத்யா ஏஜென்சீஸ், கரூர் என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினத்தை கோவிட்–19 SDRF நிதியிலிருந்து Section 15–இல் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(868/20/எச்1)

**தீர்மானம் எண். 805**

அனுமதிக்கப்பட்டது.

(4) இராசிபுரம் நகராட்சி சிவன் கோவில் தெரு கொரோனா வைரஸ் பாதிக்கப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டு பொதுமக்கள் வெளியில் செல்ல தடை விதிக்கப்பட்டதால், பொதுக் கழிப்பிடத்தை பயன்படுத்த இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. இப்பகுதியில் தற்காலிக கழிப்பிடத்தினை அமைக்க தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–இன்கீழ் பணிகளை மேற்கொண்டு கழிப்பிடம் அமைக்க மேற்க்கொள்ளப்பட்ட செலவினம் ரூ. 234040/– மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : பொதுமக்கள் அத்தியாவசியத்தினைக் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–இன்கீழ் தற்காலிக கழிப்பிடம் அமைக்க மேற்க்கொள்ளப்பட்ட ரூ. 234040/– செலவினத்தினை மன்றம் பதிவு செய்யலாம்.

(960/20/இ1)

**தீர்மானம் எண். 806**

அனுமதிக்கப்பட்டது.

(5) இராசிபுரம் நகராட்சிப் பகுதிகளில் கொரோனா வைரஸ் (கோவிட்–19) நோய் நகர பொது மக்களுக்கு பரவாமலிருக்க, கொரோனா வைரஸ் தடுப்பு பணி நடவடிக்கைக்குத் தேவையான கிருமி நாசினிகள் மற்றும் இதரப் பொருட்கள் வாங்கும் பணிக்கு கடந்த 29.04.2020 அன்று மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றின் விவரம் பின்வருமாறு.

| வ. எண். | கிருமி நாசினிகள் மற்றும் இதரப் பொருட்கள் | ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேஷன், நாமக்கல் (1–இன் விலை) | ஸ்ரீ அத்தனூர் அம்மன் டிரேடிங், காளப்பநாயக்கன்பட்டி (1–இன் விலை) ரூ. | ஸ்ரீ அக்சயா டிரேடார்ஸ், உறையூர், (1–இன் விலை) ரூ. |
|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| | | ரூ. | | |
| 1) | லைசால் 5% | 175/– | 182/– | 220/– |
| 2) | N 95 மாஸ்க் | 360/– | 375/– | 428/– |
| 3) | டிஜிட்டல் தெர்மல் மீட்டர் | 8750/– | 8900/– | 10200/– |
| 4) | சுண்ணாம்புத்தூள் | 11/– | 11.80 | 13.60 |
| 5) | 3 layer மாஸ்க் | 17/– | 18.80 | 21.80 |
| 6) | கையுறை (காட்டன்) | 38/– | 40/– | 46.50 |
| 7) | Hand Sanitizer | 850/– | 880/– | 1020/– |
| 8) | ஒளிரும் சட்டை | 350/– | 370/– | 425/– |
| 9) | Safety Gloss | 140/– | 148/– | 180/– |
| 10) | சோப் | 47.32 | 50/– | 58/– |

வ.எண். 1–இல் குறிப்பிட்டுள்ள ஒப்பந்ததாரர் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ளதால், அதன் ஒப்பந்ததாரர் M/s. ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேசன், நாமக்கல் என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டடப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினங்களை கோவிட்–19 SDRF நிதியிலிருந்து Section 15–இல் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(868/20/எச்1)

**தீர்மானம் எண். 807**

அனுமதிக்கப்பட்டது.

(6) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் டம்பர் பின் லாரி பதிவு எண். TN 28 AT 8969 என்ற வாகனத்திற்கு 6 டயர், 6 டியூப், 6 பிளாப்பு வாங்கும் பணிக்கு கடந்த 18.05.2020 அன்று மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றின் விவரம் பின் வருமாறு.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | விலை |
|---|---|---|
| 1) | சசி டயர்ஸ், இராசிபுரம் | ரூ. 62500/– |
| 2) | தங்கம் டயர்ஸ், நாமக்கல் | ரூ. 64100/– |
| 3) | சாம் டயர் ஷாப் | ரூ. 66000/– |

வ.எண். 1–இல் குறிப்பிட்டுள்ள நிறுவனத்தினர் குறைவான விலைப்புள்ளி வழங்கியுள்ளதால் M/s. சசி டயர்ஸ், இராசிபுரம் என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பொது சுகாதார நலன் கருதியும், அவசர அவசியத்தை முன்னிட்டும், நகர்மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி, தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று விநியோக ஆணையும், தொகையும் வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(1150/20/எச்1)

**தீர்மானம் எண். 808**

அனுமதிக்கப்பட்டது.

(7) இராசிபுரம் நகராட்சி அலுவலகத்திற்கு நகராட்சி ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் தினசரி வந்து செல்கின்றனர். மேற்படி நபர்களின் கைகளிலுள்ள கொரோனா வைரஸ் கிருமிகளை தானியங்கி சானிடைசர் இயந்திரத்தின் மூலம் சுத்தம் செய்யும் பணிக்கு கடந்த 20.05.2020 அன்று மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றின் விவரம் பின்வருமாறு.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | ஒன்றின் விலை |
|---|---|---|
| 1) | Staging Elements, Chennai – 17 | ரூ. 32320/– |
| 2) | Aryaman, Coimbatore – 45 | ரூ. 36385/– |
| 3) | Fresco concepts | ரூ. 41040/– |

வ.எண். 1–இல் குறிப்பிட்டுள்ள ஒப்பந்ததாரர் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ளதால், அதன் ஒப்பந்ததாரரான M/s. Staging Elements, Chennai – 17 என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினங்களை கோவிட்–19 SDRF நிதியிலிருந்து Section 15–இல் தொகை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(868/20/எச்1)

**தீர்மானம் எண். 809**

அனுமதிக்கப்பட்டது.

(8) இராசிபுரம் நகராட்சிப் பகுதிகளில் கொரோனா வைரஸ் (கோவிட்–19) நோய் பரவாமல் தடுக்கும் பொருட்டு, கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணிக்காக கிருமி நாசினி மருந்து ECO clean 50 plus வாங்கும் பணிக்கு கடந்த 14.05.2020 அன்று மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றின் விவரம் பின்வருமாறு.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | ஒரு லிட்டர் விலை |
|---|---|---|
| 1) | ஸ்ரீ சக்தி ஏஜென்சீஸ், ஈரோடு | ரூ. 2200/– |
| 2) | பிரமிட் பிராஸஸிங் மில்ஸ், ஈரோடு | ரூ. 2410/– |

வ.எண். 1–இல் குறிப்பிட்டுள்ள நிறுவனத்தினர் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ளதால், M/s. ஸ்ரீ சக்தி ஏஜென்சீஸ், ஈரோடு என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினங்களை கோவிட்–19 SDRF நிதியிலிருந்து தொகை Section 15–இல் வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(868/20/எச்1)

**தீர்மானம் எண். 810**

அனுமதிக்கப்பட்டது.

(9) இராசிபுரம் நகராட்சி பொதுப்பிரிவில் இளநிலை உதவியாளர் பணியிடம் – 1, தட்டச்சர் – 1, வருவாய் உதவியாளர் – 1 மற்றும் தங்கும் விடுதி காவலர் – 1 ஆகிய பணியிடங்களை 01.10.2010 முதல் 30.09.2011 வரை தற்காலிகமாக நீடித்து வைத்துக் கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களது செயல்முறைகள் ஆணை மூ.மு.எண். 49748/2010/எச்1 நாள் 04.11.2010–இல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி பணியிடங்கள் இந்நகராட்சிக்கு அத்தியாவசியமாக தேவைப்படுவதால் **01.10.2011** முதல் **30.09.2020** வரை பின்னேற்பும் மேலும் ஓராண்டிற்கு **1.10.2020** முதல் **30.09.2021** வரை பணி நீடித்து வைத்துக் கொள்ள அனுமதியும், மேற்படி பணியிடங்கள் நகராட்சிக்கு அவசியம் தேவைப்படுவதால் நிரந்தரமாக நீடித்து வைத்துக் கொள்ள அனுமதியும் வழங்கக் கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்பி அனுமதி பெற மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மேற்காணும் தற்காலிகப் பணியிடங்கள் இந்நகராட்சிக்கு அவசியம் தேவைப்படுவதால், **01.10.2011** முதல் **30.09.2020** வரை பின்னேற்பும் மேலும் ஓராண்டிற்கு **1.10.2020** முதல் **30.09.2021** வரை நீடித்து வைத்துக் கொள்ள அனுமதி கோரியும் மேற்படி பணியிடங்கள் நிரந்தரமாக நீடித்து வைத்துக் கொள்ளவும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களது ஒப்புதல் பெற பிரேரணை அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.

(சி1/1086/19)

**தீர்மானம் எண். 811**

அனுமதிக்கப்பட்டது.

(10) இராசிபுரம் நகராட்சி பொறியியல் பிரிவிலுள்ள பொருத்துநர் நிலை–II இரண்டு பணியிடங்கள், மீட்டர் ரீடர் – ஒரு பணியிடம் ஆகிய தற்காலிகப் பணியிடங்களுக்கு நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களது செயல்முறை ந.க.எண். **6568/09**/எப்3 நாள் **27.08.2014**–இல் **1.10.2014** முதல் **30.9.15** வரை பணி நீடிப்பு செய்து அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்நகராட்சிக்கு மேற்படி பணியிடங்கள் அவசியம் தேவைப்படுவதால் மேற்படி தற்காலிகப் பணியிடங்கள் **1.10.2015** முதல் **30.09.2020** வரை பின்னேற்பும், **1.10.2020** முதல் **30.09.2021** வரை ஓராண்டிற்கு பணி நீடிப்பு அனுமதியும் மேற்படி பணியிடம் நகராட்சிக்கு அவசியம் தேவைப்படுவதால் நிரந்தரமாக வைத்துக் கொள்ள அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** இந்நகராட்சி குடிநீர் பணிகளுக்கு அவசியம் தேவைப்படும் பொருத்துநர் நிலை–II இரண்டு பணியிடங்கள், மீட்டர் ரீடர் – ஒன்று ஆகிய தற்காலிகப் பணியிடங்களை **1.10.2015** முதல் **30.09.2020** வரை பின்னேற்பும், **1.10.2020** முதல் **30.09.2021** வரை மேலும் ஓராண்டிற்கு நீடித்து வைத்துக் கொள்ள அனுமதி கோரும் பிரேரணை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.

(சி1/1087/19)

**தீர்மானம் எண். 812**

அனுமதிக்கப்பட்டது.

(11) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு லாரி ஓட்டுநர் தற்காலிகப் பணியிடம் ஒன்றினை **01.10.2010** முதல் **30.09.2011** வரை ஓராண்டிற்கு நீடித்துக் கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது செயல்முறைகள் ஆணை மூ.மு.எண். **8269/2010**/ஜே3 நாள் **22.11.2010**–இல் அனுமதிக்கப்பட்டுள்ளது.

பொது சுகாதாரப் பணிகளின் அவசியம் கருதி இந்நகராட்சிக்கு ஓட்டுநர் பணியிடம் தேவையாக உள்ளது. மேற்படி ஓட்டுநர் பணியிடத்தை 01.10.2011 முதல் 30.09.2020 வரை பின்னேற்பும், மேலும் ஓராண்டிற்கு 1.10.2020 முதல் 30.09.2021 வரை நீடித்து வைத்துக் கொள்ள அனுமதி கோரியும், தொடர்ந்து நிரந்தரமாக நீடித்து வைத்துக் கொள்ள வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** பொது சுகாதாரப் பணிகளின் அவசர அவசியம் கருதி 01.10.2011 முதல் லாரி ஓட்டுநர் பணியிடத்தை 30.09.2020 வரை பின்னேற்பும், 1.10.2020 முதல் 30.09.2021 வரை நீடித்து வைத்துக் கொள்ள அனுமதியும், ஓட்டுநர் பணியிடத்தை நிரந்தரமாக நீடித்து வைத்துக் கொள்ள அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு உரிய பிரேரணைகள் அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.

(சி1/1088/19)

**தீர்மானம் எண். 813**

அனுமதிக்கப்பட்டது.

( 12 ) இராசிபுரம் நகராட்சி வார்டு எண். 8 பிற்பட்டோர் காலனி பகுதி சின்டெக்ஸ் தொட்டிகளுக்கு வ.உ.சி. நகர் ஆழ்துளைக் கிணற்றிலிருந்து தண்ணீர் குழாய் அமைக்கும் ரூ. 37000/– மதிப்பீட்டுப் பணிக்கு 14.05.2020 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

1) திரு ஜே. ரவிச்சந்திரன், ஒப்பந்ததாரர், ஆர். கவுண்டம்பாளையம் – மதிப்பீட்டைவிட 2.70% அதிகம்.

2) திரு என். செல்லப்பன், ஒப்பந்ததாரர், 27, வி. நகர் ரோடு எண். 17 – மதிப்பீட்டைவிட 0.18% குறைவு.

மதிப்பீட்டைவிட 0.18% குறைவான திரு என். செல்லப்பன் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி மேற்க்கொள்ளவும், செலவினத்தை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அ) மதிப்பீட்டைவிட 0.18% குறைவான திரு என். செல்லப்பன் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
2) செலவினத்தை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(939/20/இ2)

**தீர்மானம் எண். 814**

அனுமதிக்கப்பட்டது.

( 13 ) இராசிபுரம் நகராட்சி வார்டு எண். 13, 17 மற்றும் 18 பகுதிகளுக்கு மூலக்கிணற்றிலிருந்து தண்ணீர் வழங்க ரூ. 200000/– மதிப்பீட்டுப் பணிக்கு 14.05.2020–இல் பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

1) திரு ஜே. ரவிச்சந்திரன், ஒப்பந்ததாரர், ஆர். கவுண்டம்பாளையம் – மதிப்பீட்டைவிட 2.05% அதிகம்.

2) திரு என். செல்லப்பன், ஒப்பந்ததாரர், 27, வி. நகர் ரோடு எண். 17 – மதிப்பீட்டைவிட 0.16% குறைவு.

மதிப்பீட்டைவிட 0.16% குறைவான ஒப்பந்ததாரர் திரு என். செல்லப்பன் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்க்கொள்ளவும், செலவினத்தை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அ) மதிப்பீட்டைவிட 0.16% குறைவான திரு என். செல்லப்பன் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
2) செலவினத்தை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(928/20/இ2)

**தீர்மானம் எண். 815**

அனுமதிக்கப்பட்டது.

( 14 ) இராசிபுரம் நகராட்சி பகுதிகளில் தெரு நாய்கள் அதிகளவில் சுற்றி திரிகின்றன. அவ்வாறு சுற்றித்திரியும் தெரு நாய்கள் தெருக்களில் பொது மக்கள் வருவோர், போவோர்களையும், நடந்து செல்கின்ற குழந்தைகளையும் கடிக்கிறது. மேலும், தெரு நாய்கள் கடிப்பதால் பொது மக்களுக்கு ரேபிஸ் பரவும் வாய்ப்புள்ளது. எனவே, ரேபிஸ் நோயை கட்டுப்படுத்தவும், சுற்றித் திரியும் தெரு நாய்களின் பிறப்பை கட்டுப்படுத்த தெரு நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை செய்வது அவசியமாகிறது. தெரு நாய்கள் எண்ணிக்கை பற்றி நகராட்சிப் பணியாளர்கள் மூலம் கணக்கெடுப்பு எடுக்கப்பட்டது. கணக்கெடுப்பில் 212 தெரு நாய்கள் உள்ளது என்று தெரிய வருகிறது. எனவே, 212 தெரு நாய்களை பிடித்து வாகனத்தில் ஏற்றவும், கருத்தடை அறுவை சிகிச்சை செய்யவும் மற்றும் தெரு நாய்களுக்கு ARV தடுப்பூசி போடும் பணிகளை கால் நடை மருத்துவர்கள் மூலம் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ. 1.60 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிது.

**அலுவலக குறிப்பு : 1)** மன்றம் அனுமதிக்கலாம்.
2) ஒப்பந்தப்புள்ளி பெற்று கால் நடை மருத்தவர் மூலம் இப்பணியினை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3) நகராட்சி வருவாய் பொது நிதியிலிருந்து இப்பணியினை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(எச்1/1433/20)

**தீர்மானம் எண். 816**

அனுமதிக்கப்பட்டது.

(15) மனுதாரர் திரு மு. கிருஷ்ணகுமார், த/பெ. முத்துசாமி, நெ.9, திருவள்ளுவர் சாலை, இராசிபுரம் என்பவர் இராசிபுரம் நகராட்சி வார்டு – பி, பிளாக் –11, நகரளவை எண். 45/32, 45/3– இல் 1.33 ஏக்கர் பரப்பில் மனைப்பிரிவு அங்கீகாரம் கோரி விண்ணப்பித்துள்ள பிரேரணை நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், சேலம் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. நகர் ஊரமைப்பு துணை இயக்குநரால் பரிசீலனை செய்யப்பட்டு அவர்களது கடித ந.க.எண். 2734/2019/சேம–3 நாள் 10.07.2019–இல் பொது ஒதுக்கீடு மற்றும் சாலைகளை ஒப்படைக்க தெரிவித்து சாலை அமைப்பு வரைபடத்துடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேற்படி கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு அடிப்படை வசதிகளான தார்சாலை வசதிகள், குடிநீர் குழாய் வசதிகள், சாக்கடை வசதிகள், மின் கம்பம் வசதிகள் மற்றும் தெரு விளக்கு அமைக்கப்பட்டுள்ளது என நகராட்சி பொறியாளரால் 04.05.2020–இல் தெரிவிக்கப்படடுள்ளது.

மேலும், பொது உபயோகம் பரப்பளவு (228.96 ச.அடி) மற்றும் சாலைகள் பரப்பளவு 17016 ச.அடி நிலம் ஆவணம் எண். 1725/2020 மூலமாக இராசிபுரம் சப் ரிஜிஸ்டர் அலுவலகத்தில் தான பத்திரம் மூலமாக பதிவு செய்து ஒப்படைத்துள்ளார். எனவே, மேற்படி மனைப்பிரிவு சாலைகள் மற்றும் பொது உபயோக ஒதுக்கீட்டினை ஏற்பது குறித்து பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(319/19/எப்1)

**தீர்மானம் எண். 817**

அனுமதிக்கப்பட்டது.

( 16 ) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் 32 BOV வாகனங்களை தினசரி நகர பகுதிகளில் குப்பை சேகரிக்கவும், குப்பைகளை தரம் பிரித்து வாங்கவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி வாகனங்களுக்கு AMC செய்ய வேண்டியிருப்பதால், அதற்கான உத்தேச செலவினம் ரூ. 7.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினங்களை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(1307/20/எச்1)

**தீர்மானம் எண். 818**

அனுமதிக்கப்பட்டது.

( 17 ) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் கழிவுநீர் வாகனம் TN 28 AS 3146 வாகனத்தின் தகுதிச் சான்று மற்றும் பழுதுகளை சரிசெய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ. 1.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினங்களை நகராட்சி வருவாய் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(1177/20/எச்1)

**தீர்மானம் எண். 819**

அனுமதிக்கப்பட்டது.

( 18 ) இராசிபுரம் நகராட்சியில் 13 வார்டுகளிலுள்ள தெரு விளக்குகள் (1) 40 வாட்ஸ் குழல் விளக்குகள் 526, (2) சிஎப்எல் 36 வாட்ஸ் – 484, (3) சோடியம் ஆவி விளக்குகள் 67 மொத்தம் 1077 மின் விளக்குகளை பராமரிக்க இந்நகராட்சி மன்றத் தீர்மானம் எண். 579 நாள் 29.07.2019–இன்படி 17.06.2019 முதல் 16.06.2020 வரை ஸ்ரீ குமரன் எலக்ட்ரிகல்ஸ், சேலம் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

தற்போது பணியின் அவசியம் கருதியும், கொரோனா காலமாக உள்ளதாலும், தனியார் தெரு விளக்கு பராமரிப்பு காலத்தினை மேலும் ஆறு மாத காலத்திற்கு 17.06.2020 முதல் 16.12.2020 நீட்டிப்பு செய்து வழங்கவும், ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் விலை விகிதத்தின் அடிப்படையில் தொகை வழங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ. 500000/– இலட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அ) பணியின் அவசியம் கருதி ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் விலை விகிதத்தின் அடிப்படையில் **1077** மின் விளக்குகள் பராமரிக்க ஸ்ரீ குமரன் எலக்ட்ரிகல்ஸ் நிறுவனத்திற்கு **17.06.2020** முதல் **16.12.2020** வரை ஒப்பந்த நீட்டிப்பு செய்து ஆணை வழங்கலாம்.

ஆ) செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(1207/19/இ1)

**தீர்மானம் எண். 820**

அனுமதிக்கப்பட்டது.

ஒம் /– ஆ. குணசீலன்,
தனி அலுவலர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
இராசிபுரம் நகராட்சி.